ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2260/47 - 2021 දෙසැම්බර් මස 29 වැනි බදාදා - 2021.12.29
*2260/47 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

### தென் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 255 ஆம் அதிகாரமாகிய மறுசீரமைக்கப்பட்ட நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1) (1ஆ) (அ) (ii) ஆம் பிரிவின் அடிப்படையில் செய்யப்படும் கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மறுசீரமைக்கப்பட்ட நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரமாகிய) 184(1) (1ஆ) (அ) (ii) ஆம் பிரிவின் அடிப்படையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலியம் விஜேசிங்ஹ கமகே ஆகிய நான், அம்பலாங்கொடை நகர சபையின் உறுப்பினராகிய கங்கே சரத் ஸ்ரீ லால் த சில்வா என்பவர் அப்பதவி வகிப்பதை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்துகின்றேன்.*

**கலாநிதி டபிள்யூ. டபிள்யூ. கமகே,**
ஆளுநர்,
தென் மாகாணம்.

தென் மாகாண ஆளுநர் அலுவலகம்,
கீழ் டிக்ஷன் வீதி,
காலி,
2021, திசெம்பர் 29.

EOG 12-0323/1

1A - PG 5675 — 15 (2021/12)
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## மாகாண சபைகள்

தென் மாகாண மாகாண சபை

### தென் மாகாண கௌரவ ஆளுநரினால் விடுக்கப்படும் அறிவித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (255 ஆம் அதிகாரமாகிய) மறுசீரமைக்கப்பட்ட நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1)(1அ) ஆம் பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலியம் விஜேசிங்ஹ கமகே ஆகிய நான், அம்பலாங்கொடை நகர சபையின் உறுப்பினர் கங்கே சரத் ஸ்ரீ லால் த சில்வா என்பவரின் மூலம் 255 ஆம் அதிகாரமாகிய மறுசீரமைக்கப்பட்ட நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் ஏதும் இழைக்கப்பட்டுள்ளதா என்பதை இந்த அறிவித்தல் திகதியில் இருந்து 03 மாதங்களுக்குள் விசாரணை செய்து எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதிமன்ற அதிகாரி திருமதி சரோஜினீ குசலா வீரவர்தன அவர்களை நியமிக்கின்றேன்.*

*இந்த அதிகாரிக்குரிய அதிகாரங்கள் விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழுவின் அதிகாரங்களைக் கொண்டது.*

**கலாநிதி டபிள்யூ. டபிள்யூ. கமகே,**
ஆளுநர்,
தென் மாகாணம்.

தென் மாகாண ஆளுநர் அலுவலகம்,
கீழ் டிக்ஷன் வீதி,
காலி,
2021, திசெம்பர் 29.

EOG 12-0323/2